பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

28 02 2025 12 40
வெள்ளிக்கிழமை பிற்பகல்

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. அறிவியலில் புதிய கண்டுபிடிப்புகளை மேற்கொண்டு வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க பாடுபடுமாறு இளைஞர்களை பிரதமர் திரு நரேந்திரமோடி கேட்டுக் கொண்டுள்ளார்.
2. இந்தியா – ஐரோப்பிய யூனியன் இடையேயான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் உலகின் மிகப்பெரிய வர்த்தக ஒப்பந்தமாக அமையும் என்று ஐரோப்பிய யூனியன் தலைவர் திருமதி **Ursula von der leyen** கூறியுள்ளார்.
3. தமிழகத்தில் புதிய கல்விக் கொள்கையை அமல்படுத்த வேண்டுமென மாணவர்கள் மற்றும் கல்வியாளர்கள் விரும்புவதாக தமிழக ஆளுநர் திரு ஆர் என் ரவி தெரிவித்துள்ளார்.
4. வானநாட்டில் கடந்த ஜனவரி மாதத்தில் 23 லட்சத்து 48 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு யு பி ஐ பரிவர்த்தனைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.
5. மகளிர் பிரிமியல் லீக் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் தில்லி அணி – மும்பை அணியை எதிர்கொள்கிறது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

தேசிய அறிவியல் தினம் இன்று கொண்டாடப்படுகிறது

நோபல் பரிசு பெற்ற இயற்பியல் விஞ்ஞானி சர் சி வி.ராமனின், ராமன் விளைவு 1928-ஆம் ஆண்டு இதே நாளில் கண்டுபிடிக்கப்பட்டதை போற்றும் வகையில் இந்நாள் ஆண்டுதோறும் தேசிய அறிவியல் தினமாக கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி, பிரதமர் திரு நரேந்திரமோடி வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில் அறிவியல் மீது ஆர்வம் கொண்டுள்ள இளம் கண்டுபிடிப்பாளர்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அறிவியலை தொடர்ந்து பிரபலப்படுத்துவதுடன், புதிய கண்டுபிடிப்புகளை மேற்கொள்வதன் மூலம் வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க அறிவியலை பயன்படுத்துவோம் என்றும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை இணை அமைச்சர் திரு ஜிதேந்திரசிங் வெளியிட்டுள்ள செய்தியில், தலைசிறந்த இயற்பியல் விஞ்ஞானியான சர் சி வி ராமனுக்கு இந்நாளில் மரியாதை செலுத்ததுவதாகக் கூறியுள்ளார்.

இதேநாளில் அவர் கண்டுபிடித்த ராமன் விளைவு, அறிவியல் தொழில்நுட்பத்துறையில் முக்கியத்துவம் வாய்ந்தது என்றும் திரு ஜிதேந்திரசிங் குறிப்பிட்டுள்ளார்.

**[]<<<>>>[]**

ஐரோப்பிய யூனியன் தலைவர் திருமதி **Ursula von der leyen** இன்று புதுதில்லியில் பிரதமர் திரு நரேந்திரமோடியுடன் இருதரப்பு குழுக்கள் அளவிலான பேச்சுவார்த்தை நடத்துகிறார்.

இரண்டு நாள் பயணமாக இந்தியா வந்துள்ள அவர், இன்று புதுதில்லி ஹைதராபாத் இல்லத்தில் நடைபெற்ற இந்தியா – ஐரோப்பிய யூனியன் வர்த்தக மற்றும் தொழில்நுட்ப கவுன்சில் கூட்டத்தில் உரையாற்றினார்.

இந்தியா – ஐரோப்பிய யூனியன் இடையேயான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் உலகின் மிகப்பெரிய வர்த்தக ஒப்பந்தமாக அமையும் என்று அவர் கூறினார்.,

இருதரப்புக்கும் பயனளிக்கக்கூடிய இந்த ஒப்பந்தத்தை இந்த ஆண்டுக்குள் நிறைவேற்ற பிரதமர் திரு நரேந்திரமோடியிடம் வலியுறுத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

இருதரப்புக்கும் இடையேயான உலகளாவிய ஒத்துழைப்புக்களை மேலும் விரிவுபடுத்துவது அவசியம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்தியாவின் கலாச்சாரம், ஜனநாயகம், வரலாறு போன்றவை தம்மை பெரிதும் ஈர்த்துள்ளதாகவும் திருமதி **Ursula von der leyen** தெரிவித்தார்.

இந்த கூட்டத்தின் முடிவுகள் குறித்து வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், செமி கண்டக்டர், செயற்கை நுண்ணறிவு, 6-ஜி தொழில்நுட்பம், மின்சார வாகனம், பசுமை ஹைட்ரஜன் மற்றும் இருதரப்புக்கும் பயனளிக்கக்கூடிய வர்த்தக நடைமுறைகள் குறித்து ஐரோப்பிய யூனியன் நிர்வாகிகளுடன் விவாதிக்கப்பட்டதாகத் தெரிவித்துள்ளார்.

டிஜிட்டல் ஒத்துழைப்பு, தூய்மையான மற்றும் பசுமை எரிசக்தித் துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்தும் ஆலோசிக்கப்பட்டதாகக் கூறியுள்ள திரு ஜெய்சங்கர், இந்த ஆக்கப்பூர்வ விவாதங்கள் புதிய பொருளாதாரம், வர்த்தகம் மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்புகளுக்கு வழிவகுக்கும் என்று குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக மத்திய அமைச்சர்கள் திரு பியூஷ் கோயல், திரு மனோகர்லால் ஆகியோரும் ஐரோப்பிய யூனியன் தலைவரை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினர்.

**[]<<<>>>[]**

நாட்டில் கடந்த ஜனவரி மாதத்தில் 23 லட்சத்து 48 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு யு பி ஐ பரிவர்த்தனைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

மொத்தம் 16 புள்ளி ஒன்பது ஒன்பது பில்லியன் பரிவர்த்தனைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும், இது இதுவரை இல்லாத சாதனை என்றும் கூறப்பட்டுள்ளது.

இந்தியாவில் சில்லரை பணப்பட்டுவாடாவில் 80 சதவீத அளவுக்கு

யு பி ஐ மூலம் டிஜிட்டல் பரிவர்த்தனை நடைபெறுவதாகவும் மத்திய அரசின் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

**[]<<<>>>[]**

பிரயாக்ராஜில் நடைபெற்ற மகா கும்பமேளாவில் பங்கேற்க இயலாத உத்திரபிரதேச மக்களுக்கு புனித நீர் அனுப்பி வைக்கப்படும் என அம்மாநில முதலமைச்சர் திரு யோகி ஆதித்யநாத் தெரிவித்துள்ளார்.

கும்பமேளா பணிக்காக பிரயாக்ராஜ் வந்த தீயணைப்புத் துறையினர் இன்று தத்தமது மாவட்டங்களுக்கு திரும்புவார்கள் என்றும், அவர்கள் மூலம் இந்த புனித நீர் மாநிலத்தில் உள்ள 75 மாவட்டங்களுக்கும் அனுப்பி வைக்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்த புனித நீரை பெற்றுச் சென்று மக்கள் தங்களது வீடுகளில் பூஜைகளை செய்யலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

தமிழகத்தில் புதிய கல்விக் கொள்கையை அமல்படுத்த வேண்டுமென மாணவர்கள் மற்றும் கல்வியாளர்கள் விரும்புவதாக தமிழக ஆளுநர் திரு ஆர் என் ரவி தெரிவித்துள்ளார்.

சென்னையில் தமிழகத்தின் தென் மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்கள், கல்வியாளர்கள், வர்த்தகம், சுகாதாரம், விருந்தோம்பல் துறையினர், புத்தாக்கத் தொழிலில் ஈடுபட்டுள்ள இளைஞர்கள் மற்றும் மகளிர் தொழில் முனைவோருடன் அவர் கலந்துரையாடினார்.

கூட்டத்தில் பேசிய ஆளுநர், தென்மாவட்டங்கள் மனித வளமுமம, இயறகை வளமும் மிகுந்துள்ள போதிலும் அவற்றை இதுவரை முறையாக பயன்படுத்தவில்லை என்றார்.

அப்பகுதியை தொழில்மயமாக்குவதற்கு ஏராளமான வாய்ப்புகள் உள்ளபோதிலும், தென்மாவட்டங்கள் புறக்கணிக்கப்படுவதாகவும் ஆளுநர் குறிப்பிட்டார்.

இளைஞர்களிடையே போதைப்பழக்கம் அதிகரித்து வருவது கவலை அளிக்கக்கூடியது என்றும் அவர் தெரிவித்தார்.

தமிழக அரசு இருமொழிக் கொள்கையில் பிடிவாதமாக இருப்பதால், தங்களுக்கான வாய்ப்புகள் பறிபோகிறது என்று மாணவர்கள் கருதுவதாகவும் அவர் கூறினார்.

ஹிந்தி எதிர்ப்பு என்ற பெயரில் தென்னிந்திய மொழிகளைப் படிப்பதற்குக் கூட அனுமதிக்கப்படுவதில்லை என்று மாணவர்கள் கவலை தெரிவிப்பதாகவும் திரு ஆர் என் ரவி தெரிவித்தார்.

[]<<<>>>[]

ஆந்திர மாநில அரசின் வரும் நிதி ஆண்டுக்கான பட்ஜெட் அம்மாநில சட்டப்பேரவையில் இன்று தாக்கல் செய்யபப்பட்டது.

நிதி அமைச்சர் திரு பையாவுல கேசவ் இதனை தாக்கல் செய்தார்.

இந்த பட்ஜெட்டில் பள்ளிக் கல்வித் துறைக்கு 31 ஆயிரத்து 805 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

வேளாண் பட்ஜெட்டை அத்துறைக்கான அமைச்சர் திரு அட்ச நாயுடு தாக்கல் செய்தார்.

இதில் வேளாண்துறைக்கு 48 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

இதனிடையே பீகார் மாநில பட்ஜெட் கூட்டத்தொடர் பாட்னாவில் இன்று தொடங்கியது.

சட்டப்பேரவை மற்றும் மேலவையின் கூட்டுக் கூட்டத்தில் அம்மாநில ஆளுநர் திரு ஆரிப் முகமது கான் உரையாற்றி கூட்டத்தொடரை தொடங்கி வைத்தார்.

பீகாரின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு அம்மாநில அரசு அயராது பாடுபட்டு வருவதாக ஆளுநர் தமது உரையில் பாராட்டு தெரிவித்தார்.

[]<<<>>>[]

நேபாளத்தில் இன்று அதிகாலை சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.

இது ரிக்டர் அளவில் ஆறு புள்ளி ஒன்றாக பதிவாகியுள்ளது.

நேபாள தலைநகர் காத்மாண்டுவிலிருந்து 65 கிலோமீட்டர் தொலைவில் உள்ள பைரவ் குந்தா பகுதியில் மையம் கொண்டிருந்த இந்த நிலநடுக்கம் பீகார், சிக்கிம் மற்றும் மேற்குவங்க மாநிலங்களிலும் உணரப்பட்டதாக தேசிய நிலநடுக்கவியல் ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது.

இந்தியா – திபெத் எல்லைப் பகுதியிலும் நிலநடுக்கத்தின் தாக்கம் இருந்ததாகவும் அது கூறியுள்ளது.

[]<<<>>>[]

ஐ நா பாதுகாப்பு கவுன்சிலில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியம் என இந்தியா மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

ஐ பொதுச்சபைக் கூட்டத்தில் உரையாற்றிய இந்தியாவின் நிரந்தர பிரதிநிதி திரு பர்வத நேனி ஹரிஸ் இந்த சீர்திருத்தத்தை உடனடியாக மேற்கொள்வது அவசியம் என்றார்.

[]<<<>>>[]

அமெரிக்க ராணுவத்தில் பணியாற்றும் திருநங்கைகளை அடையாளம் கண்டு பணிநீக்கம் செய்ய அந்நாட்டு ராணுவ தலைமையகமான பெண்டகன் உத்தரவிட்டுள்ளது.

அதிபர் திரு டொனால்டு ட்டிரம்ப் அறிவுறுத்தலின்படி இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ள பெண்டகன், ராணுவத்தில் பணியாற்றும் திருநங்கைகளை அடையாளம் காண்பதற்கான நடவடிக்கைகளை அடுத்த மாதம் 26-ஆம் தேதிக்குள் மேற்கொள்ளுமாறு ராணுவத்தின் பல்வேறு பிரிவுகளுக்கும் உத்தரவிட்டுள்ளது.

தற்போது பணியில் உள்ள ராணுவ வீரர்கள், தங்களது பாலுணர்வில் மாற்றம் தெரிந்தாலோ அல்லது அதற்காக சிகிச்சை பெற்று வந்தாலோ இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரிவிக்க வேண்டுமெனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

திருநங்கைகளை அடையாளம் கண்ட பின் 30 நாட்களுக்குள் அவர்களை பணியிலிருந்து விடுவிக்க வேண்டமென்றும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

சாலையோர வியாபாரிகளுக்கான மத்திய அரசின் ஸ்வநிதி திட்டம் மதுரை மாவட்டத்தில் முனைப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த திட்டத்தின் மூலம் கிடைக்கும் கடனுதவி தங்களுக்கு பெரும் பயனளிப்பதாக உள்ளது என்று பயனாளிகள் தெரிவித்துள்ளனர்.

*( சவுண்ட்பைட் - பயனாளிகள் ) --- 45 செகண்ட்*

**[]<<<>>>[]**

மகளிர் பிரிமியல் லீக் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் தில்லி அணி – மும்பை அணியை எதிர்கொள்கிறது.

இப்போட்டி பெங்களூருவில் இரவு மணி 7-30-க்கு தொடங்குகிறது.